Sri **MANAKULA VINAYAGAR**

Medical college and Hospital

MANA - KURAL

*The official podcast of SMVMCH*

*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

**Name of Resource person: Dr.S.Babu**

**Podcast Title: World Piles Day Celebrations**

**Department: General Surgery**

**Category: (Select relevant category)**
Public awareness/Continuing medical education/Research & innovation/
**Day celebration**

## TRANSCRIPT

வணக்கம் நான் டாக்டர். S. பாபு, ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சை பிரிவில் பேராசிரியராக பணி புரிந்து கொண்டிருக்கிறேன். இந்த ஒலிப்பதிவில் மூலநோய் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை உங்களுக்காக பதிவு செய்துள்ளேன். மூலநோய் என்பது மலக்குடலின் கீழ்ப்பகுதி திசுக்களில் உள்ள சிறு இரத்தக் குழாய்கள் விரிவடைந்து வீங்குவதால் அத்திசுக்கள் ஆசன வாயின் வெளிப்புறத்திற்கு தள்ளப்படும். அந்த சமயத்தில் மலம் கழிக்கும் பொழுது இரத்தக் கசிவையும் உண்டாக்கும்.

மூலத்தில் உள்மூலம், வெளிமூலம் என்று இரண்டு வகை உள்ளது. உள் மூலம் உள்ளவர்களுக்கு மலம் கழித்த பின்பு வலி இல்லாமல் இரத்தம் சொட்டு சொட்டாக வெளியேறும். பின்னர் நாளடைவில் இந்த உள்மூலம் பெரிதாகி ஆசன வாய்க்கு வெளியே வரலாம். அப்பொழுது ஆசனவாயை சுற்றி அரிப்பும், வலியும் உண்டாகலாம்.

வெளிமூலம் ஆசனவாயின் வெளிப்பகுதியில் இருப்பதை உணரமுடியும். இவ்வகையிலும் இரத்தக் கசிவும் அதைச்சுற்றி அரிப்பும் பின்னர் நுண்கிருமிகளால் தொற்றும் ஏற்படலாம்.

மூலநோய் யாருக்கு வர வாய்ப்பு உள்ளது என்றால் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள், உடல் பருமனானவர்கள், பளுதூக்கும் வேலையில் இருப்பவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், நெடுநாள் மலச்சிக்கலால் கஷ்டப்படுபவர்கள், கழிவறையில் நீண்டநேரம் உட்கார்ந்து மலம் போவதற்காக அழுத்தம் கொடுப்பவர்கள்.

இனி மூலநோய் வராமல் தடுப்பது எப்படி என்று பார்ப்போம். தினமும் போதுமான அளவு தண்ணீர் அதாவது இரண்டு லிட்டர் அளவிற்கு குடிக்கவேண்டும். உணவில் நார்ச்சத்து உள்ள கீரைகள், பழங்கள், தானிய வகைகள் இவற்றை கூடுதலாக சேர்க்க வேண்டும். மலம் கழிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும் போது நேரம் தள்ளிப்போடாமல் உடனடியாக மலம் கழிக்க வேண்டும். இரவில் நல்ல தூக்கம் இருந்தால் குடல் இயக்கம் சீராக இருந்து காலை எழுந்தவுடன் மலம் கழிப்பது சுலபமாக இருக்கும்.

மூலநோயின் அறிகுறியான மலம் கழிக்கும் பொழுது ஆசனவாய் வழியே இரத்தம் வெளியேறினால் உடனடியாக தகுந்த மருத்துவரைக் கண்டு பரிசோதித்து பின்பு சிகிச்சை மேற்கொள்ளவும். உங்கள் மருத்துவர் ஆசன வாய் வழியாக ப்ராடஸ்கோப் என்னும் சிறிய குழாய் ஒன்றை செலுத்தி மூலம் இருக்கிறதா அல்லது பிஷர் எனும் ஆசனவாய் வெடிப்பு உள்ளதா அல்லது 'பிஸ்டுலா இன் ஏனோ' எனும் பௌத்திரம் இருக்கிறதா என்று பரிசோதிப்பார். சிலருக்கு மலக்குடலுக்கு மேலே உள்ள பெருங்குடல் பகுதியில் ' பாலிப்' எனும் சிறிய கட்டிகள் அல்லது புற்று நோய் உள்ளதா என்று பார்க்க ' சிக்மாய்டாஸ்கோப்', 'க்ளோனாஸ்கோப்' பரிசோதனைகளும் தேவைப்படலாம்.

நவீன மருத்துவமுறையில் ஆரம்ப கட்ட மூலநோயை அறுவை சிகிச்சை இல்லாமல் குணப்படுத்தலாம். இரண்டாம் நிலையில் உள்ள மூலநோய்க்கு ஆசனவாய் வழியே மூலத்தில் ஊசி மருந்து செலுக்தி மூலத்தை சுருங்க வைக்கலாம் அல்லது ரப்பர் வளையங்கள் உபயோகித்தும் குணப்படுத்தலாம்.

மூன்றாம் நிலையில் உள்ள மூலநோய்க்கு பெரும்பாலும் அறுவை சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது. நவீன முறையான 'ஸ்டேப்லர்ஹெமராய்ட்டக்டமி' என்னும் அறுவைசிகிச்சை சில மருத்துவமனைகளில் செய்யப்படுகிறது. மூல நோயின் அறிகுறிகளை ஆரம்ப கட்டத்திலேயே அறிந்து சிகிச்சை பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்

Signature of the Resource Person

Dr.S.BABU, M.S.,
Regd. No: 36341
PROFESSOR
DEPARTMENT OF GENERAL SURGERY
Sri Manakula Vinayagar Medical College & Hospital
Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry-605 107.

Signature of the HOD

Dr. K. SRINIVASAN, M.S.,
Reg. No: 28833
PROFESSOR
Department of General Surgery
Sri Manakula Vinayagar Medical College and Hospital
Kalitheerthalkuppam, Puducherry-605107.